**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
**Ang Mo Kio Tamil Methodist Church**

**21st ஜூலை / July 2024 ஞா யிறு ஆராதனை**

Mission Sunday

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. ராஜம் சுரேஷ்**<br>Mrs. Rajam Suresh |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>**Choir** |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. ராஜம் சுரேஷ்**<br>Mrs. Rajam Suresh |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**அரிக்கட்டோடே அரிக்கட்டோடே**

*1. சத்தியவேதமான விதை காலை மாலை*
*விதைப்போம் எப்போதும் ஓய்வில்லாமலே*
*அறுப்பின் நற்காலம் எதிர் நோக்குவோமே*
*சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே*

**அரிக்கட்டோடே அரிக்கட்டோடே**
**சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே**

*2. மழையடித்தாலும், வெயிலெரிந்தாலும்*
*குளிர்ச்சியானாலும், வேலை செய்வோமே*
*நல்ல பலன் காண்போம், துன்பம் மாறிப்போகும்*
*சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே*

*3. கவலை, விசாரம் கஷ்ட நஷ்டத்தோடும்*
*விதைத்தாலும் வேலை விடமாட்டோமே*
*இளைப்பாற கர்த்தர் நம்மை வாழ்த்திச் சேர்ப்பார்*
*சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் *29*ம் ஞாயிறு**<br>"சங்கீதம் 93" | **சபையார் இணைந்து**<br>Congregation |

"கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்"

**Psalter Reading "Psalm 93"**

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**வீராதி வீரர் யேசு சேனை நாங்கள்**

*1. வீராதி வீரர் யேசு சேனை நாங்கள்,*
*சேனை நாங்கள்; யேசுவின் சேனை நாங்கள்.*

*2. திரு வசனத்தை எங்கும் திரிந்து சொல்வோம்,*
*திரிந்து சொல்வோம்; அதை அறிந்து சொல்வோம்.*

*3. அறிவீன மென்னும் காட்டை அதமாக்குவோம்,*
*அதமாக்குவோம்; ஞானமதால் தாக்குவோம்.*

*4. சிலுவைக் கொடியைச் சேரத் தேடிப் பிடிப்போம்.*
*தேடிப் பிடிப்போம்: அன்பு கூர்ந்து பிடிப்போம்.*

*5. ரட்சணிய சீராவுடன் நீதிக் கவசம்,*
*நீதிக் கவசம்; கையாடுவோம் வசம்.*

*6. விசுவாசக் கேடகத்தை மேலுயர்த்துவோம்.*
*மேலுயர்த்துவோம்; அதை மேலுயர்த்துவோம்.*

*7. பாவச் சோதனைத் தடைகள் பாசம் நீக்குவோம்.*
*பாசம் நீக்குவோம்; ஆசாபாசம் போக்குவோம்.*

| | |
|---|---|
| ✝ **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **திருமறைப் பாடம்**<br>**எபேசியர் 1:9-10, 4:12**<br>Scripture Reading :<br>**Ephesians 1:9-10, 4:12, 13** | **மிஸ். ஷீனா நோயல்**<br>Miss.Sheena Noel |
| **அருளுரை**<br>Sermon | Col (Retd) Quek Koh Eng |
| ✝ **அர்ப்பணகீதம்**<br>Offertory & Closing Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

## பாவம் பெருகுதே! பாரும் பரன் இயேசுவே!

***பாவம் பெருகுதே! பாரும் பரன் இயேசுவே!***
***அழியும் மனுகுலம் அதையும் இரட்சிப்பீரே!***

*1. ஆத்தும இரட்சிப்பிழந்தவர் ஆயிரம் ஆயிரமாய்*
*அன்றாடகம் இந்த மண்ணடியில் அழிந்து சாகின்றாரே!*

*2. இரட்சிப்பின் நற்செய்தி கேட்பவர் எச்சரிப்பை வெறுத்து*
*இரட்சகர் இயேசுவை இழந்தோராய் இன்றும் கெட்டழிகின்றார்!*

*3. தானியேல் போல ஜெபித்திடும் தாசர் பலர் மறைந்தார்!*
*திறப்பின் வாசலில் நிற்கும் சிலர் தூங்கிக் களைத்துப் போனார்.*

*4. எமது காரியமாகவே யாரை அனுப்பிடுவேன்*
*என்றவர் அழைக்கும் இன்ப சத்தம் என்னுள்ளம் தொனிக்குதே!*

*5. ஜீவனை வெறுத்துத் தியாகமாய் சேவையும் செய்திடுவேன்*
*ஜீவனுக் கீடாக ஜனங்களை ஜீவ தேவன் தருவார்!*

*6. வெறுங்கையாய் பரலோகத்தில் வந்திடேன் இயேசு நாதா*
*ஆத்தும ஆதாயம் செய்திடவே ஆசீர் பொழிந்தனுப்பும்!*

***அறிவிப்புகள்***
Announcements

Missions presentation

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***எபேசியர் 1 : 9-10***
**Ephesians 1 : 9 - 10**

9. ***காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று.***
10. ***தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**